(සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved)

# Km/Km/Al-Mazhar Girls' High School - Nintavur.

பாடசாலை மட்ட இரண்டாம் தவணைக்கணிப்பீடு - 2024

## தமிழ் மொழியும் இலக்கியமும் -I

புள்ளிகள்

சுட்டெண்................ **தரம் : 11** நேரம் : 1.00 மணித்தியாலம்

பகுதி I

**பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையினைத் தெரிக.**

01. “தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்.....” இதில் மண்டுகம் என்பதன் பொருள்.
    1. மான் 2. தவளை 3.குளம் 4. வண்டு

02. “அணி தேர் புரவி...” இங்கு அணி என்பதன் பொருள்
    1. அழகு 2. அன்பு 3. பெருமை 4. வரிசை

03. “கால் கொண்டு வண் கவிதை.....” இங்கு வண் என்பதன் எதிர்ச்சொல்
    1. அடிமை 2. அழகு 3. அவலட்சனம் 4. திண்மை

04. “கொங்காக்கு அமராபதி அளித்த கோவே...” இங்கு அமராபதி என்பதன் எதிர்ப்பதம்
    1. மேலோகம் 2. கலியுகம் 3. சுவர்க்கம் 4. நரகம்

05. “சமநெறிச் செல்வராகிய அவர் தமக்கும் நாய்க்குமிடையே ஒருமை காண்கிறார்” - இங்கு ஒருமை என்பதன் எதிர்க்கருத்து.
    1. பன்மை 2. உடன்பாடு 3. வேற்றுமை 4. சமத்துவம்

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. குறியாக்கம் என்று குறிக்கப்படும் கலைச்சொல்லுக்கு நிகரான சொல்.
    1. Demand 2. Image 3. Solid 4. Encoding

07. நெல்லின் உள்ளீடு அரிசி என்பது போல கற்றாளையின் உள்ளீடு
    1. சுளை 2. பருப்பு 3. சாறு 4. சோறு

08. முப்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
    1. கடதாசி விழா 2. தகர விழா
    3. முத்து விழா 4. இரும்பு விழா

09. பிரித்தானியர் காலத்தில் உப்பு வரி வசூலிக்கப்பட்டது இதில் வசூல் எனும் மொழி
    1. அரபு மொழி 2. பாரசீக மொழி
    3. ஒல்லாந்து மொழி 4. உருது மொழி

10. அத்திரம், கணை, சரம், பாணம் ஆகிய பன்மொழியைக் குறிக்கும் ஒரு சொல்
    1. அம்பு 2. அரசன் 3. சபை 4. வில்

11. முத்துக் குவியல் என்பது போல பூதம்....
    1. தொகுதி 2. கும்பல் 3. கணம் 4. திரள்

12. பின்வரும் சொற்களில் 'க' கரம் மாறுபட்டு ஒலிக்கும் சொல்

1. கப்பல் 2. பாக்கு 3. தங்கம் 4. நாட்காட்டி

13. ஒத்த பொருள் தரும் சொற்களால் ஆன இணைமொழி

1. ஆதியந்தம் 2. சூது வாது 3. அரைகுறை 4. ஆடிப்பாடி

14. பெய்த மழை காரணமாக ஆற்று வெள்ளம் கங்குரையின்றி பாய்ந்தது - கங்கரை என்பது.

1. இரட்டைக் கிளவி 2. அடுக்குத் தொடர்
3. அடுக்கிடுக்குத் தொடர் 4. இணை மொழி

15. "வானக் கடலில் வெள்ளியோடம் ஒன்று கண்டேன்" இங்கு வானக்கடல் என்பதில் இடம்பெற்றுள்ள அணி

1. உவமை 2. உருவகம்
3. தன்மை நவிற்சி 4. உயர்வு நவிற்சி

16. ஏதேனும் ஒன்றை மிகுந்த ஈடுபாட்டோடு இலயித்துப் பார்ப்பதை குறிப்பிடுவதற்கு மிகப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்.

1. வழிமேல் விழிவைத்து 2. அகமும் முகமும் மலர
3. வைத்தகண் வாங்காமல் 4. உள்ளத்தில் உவகை பொங்க

17. "கடிமலர்க் கொண்டு கடவுளை வணங்குவது சாலவும் நன்று" இங்கு வந்துள்ள உரிச் சொற்கள்.

1. கடி, நன் 2. கடி, சால
3. மலர், வணங்க 4. சால, கட

18. பகுதி விகாரப்பட்ட சொல்

1. செய்தான் 2. கண்டான் 3. நடந்தான் 4. பாடுகிறான்

19. பெற்றிலன் என்பதில் இடம்பெற்றுள்ள எதிர்மறை இடைநிலை

1. இல் 2. அல் 3. ற் 4. இலன்

20. மூவிடத்துக்கும் பொருத்தமான வினைமுற்று

1. வந்தேன் 2. முடியும் 3. செய்வான் 4. வாருங்கள்

**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும்மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

21. வெந்தபுண்ணில் வேல் பாய்ந்தது போல என்பதற்கு பொருத்தமான மற்றுமோர் உவமைத்தொடர்

1. வேலியே பயிரை மேய்ந்தாற் போல
2. சக்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல
3. எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல
4. கிளியை வளர்த்து பூனைவாயில்கொடுத்தது போல

22. அபூர்வமாக நடைபெறும் நிகழ்வைக் குறிக்கப் பொருத்தமான உமைத்தொடர்.

1. கரடி கார்த்திகைப் பிறை கண்டது போல
2. யானை முன் பூனை போல
3. தேடிய பூண்டு காலில் அகப்பட்டது போல
4. ஆண்டிகள் மடம் கட்டியது போல

(සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved)

புள்ளிகள்

# பாடசாலை மட்ட இரண்டாம் தவணைக்கணிப்பீடு - 2024
# தமிழ் மொழியும் இலக்கியமும் -II

சுட்டெண்.................. **தரம் : 11** நேரம் : 2.00 மணித்தியாலம்

## பகுதி II

- ❖ **கவனிக்குக :**
- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

**01. சுருக்கமான விடை தருக.**

I. பின்வரும் தொடரைச் சந்திபிரித்தெழுதுக.

“பெருமு தாளரே மாகிய வெமக்கே”

II. “இஞ்சால வா மகன் பிரேதத்தைத் தூக்கப் போறாக” இப்பேச்சு மொழி வாக்கியத்தை எழுத்து மொழியில் எழுதுக.

III. பெயர்த் தொடர் என்றால் என்ன என்பதை விளக்கி ஓர் உதாரணம் தருக.

IV. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக பிரபல்யமான இந்தியாவின் நடிகை மாரடைப்பால் இறந்தாள்.

V. எனக்குச் சிங்களம் பேசத் தெரியும்.

எனக்கு ஆங்கிலம் எழுதத் தெரியும். இவ்விரண்டு தொடர்களையும் “உம்” இடைச்சொல்லைக் கொண்டு சேர்த்து எழுதுக.

VI. “கவிதைப் பெண்ணை விடுதலை செய்தவன் பாரதி” இத்தொடரில் இடம்பெறும் அணி யாது? விளக்குக.

VII. “புகையிரதம் சரியான நேரத்துக்குப் புறப்படவில்லையாயின் பயணிகள் சிரமப்படுவர்” இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.

VIII. “அவன் முகக்கவசம் அணிந்துள்ளான்”

எனும் செய்வினை வாக்கியத்தைச் செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

IX. “சிறுமி விரைவாக ஓடி வந்தாள்”

இவ்வாக்கியத்தில் இடம்பெறும் வினையெச்சம் யாது?

X. பின்வருவனவற்றுள் சுருக்கம் எழுதும் சந்தர்ப்பம் அல்லாதது எது?

புத்தக வாசிப்பு, விரிவுரைகளின் போது, கட்டுரையாக்கத்தின் போது தொகுப்புரைகள்.

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக. **நீங்கள் தெரிவு செய்த கட்டுரைக்குப் பொருத்தமான தலைபபபிடுக.**

(அ) முற்காலத்தில் வாழ்ந்த மனிதன் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தான். இன்று தனது வாழ்க்கைக் கோலத்தை மாற்றிக்கொண்டு தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இயற்கைச் சூழலுக்கு மாற்றமாக வாழ்கிறான். இதனால் இயற்கை சீற்றமடைந்துள்ளது. நாளாந்தம் இயற்கை அனர்த்தங்களும் முரண்பாடான காலநிலை மாற்றங்களும் அதிகரித்து வருகின்றன. இதனை விளக்கி ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக.

(ஆ) தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்று எந்தவொரு மூலையில் நடக்கும் விடயமும் மறுகணமே நமக்கு கிடைத்து விடுகின்றது. கைத்தொலைபேசியிலோ, கணனியிலோ விசைப்பலகையில் நுனி விரலை அழுத்திய மறுகணமே தேடும் தகவல்கள் நமக்கு கிடைக்கின்றன. மறுபுறம் பார்த்தால் உலகில் மலிந்து வரும் சமூகச் சீரழிவுகளுக்கு நம் இளஞ் சந்ததியினரைக் கொண்டு செல்கிறது. இவ்விடயத்தில் நாம் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாணவர் மன்றத்தில் நீர் நிகழ்த்தும் சொற்பொழிவு.

(இ) மனித விழுமியப் பண்புகள் மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டமையும் ஆன்மீக நாட்டமின்மையுமே சமூகத்தில் குற்றச்செயல்கள். அதிகரிப்பதற்கு காரணமாகும். மனிதன் மரணத்திற்குப் பயந்தவன் ஆதலால் மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் குற்றச்செயல்களை இல்லாதொழிக்கலாம். எனும் கருத்து உலகளாவிய ரீதியில் வலுப்பெற்று வருகிறது. நல்ல சமுதாயத்தை உருவாக்க மரண தண்டனை அவசியம் எனக் கூறும் ஒருவருக்கும் இக் கூற்றை மறுக்கும் ஒருவருக்குமிடையிலான உரையாடல்.

(ஈ) கர்ணகை ஓர் ஏழைத் தாய். நான்கு பிள்ளைகளின் தாயான அவளுடைய கணவன் திடீர் விபத்தொன்றில் மரணித்துவிடுகிறான். பிள்ளைகளை வளர்த்துக் காப்பாற்ற வேண்டிய பாரிய பொறுப்பு அவளுக்கு ஏற்படுகிறது. இதனால் கடுமையாக உழைத்து தன் பிள்ளைகளைக் காப்பாற்றினாள். இதனால் அவள் பல சோதனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் தளராமல் உழைத்தாள். இக் கருவை அடிப்படையாகக்கொண்ட கற்பனைச் சிறுகதை.

(25 புள்ளிகள் )

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

நினைவாற்றலை வளர்க்க உதவும் முக்கியமான கூறு நேரம் ஆகும். எதனையும் மேலோட்டமாக விரைவாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படாமல் ஒவ்வொன்றுக்கும் தேவையான உரிய நேரத்தை ஒதுக்கி அந்தப் பணியைச் செய்ய வேண்டும். இதன் மூலம் நினைவாற்றல் வளர்கிறது. ஒவ்வொரு பணியையும் அவசரப்படாமல் அதனை முடிக்க எவ்வளவு நேரம் தேவையோ அவ்வளவு நேரத்தை செலவிட்டு அப்பணியை முடிக்க வேண்டும். இதன் மூலம் நினைவாற்றலை வளர்க்க முடியும். அவசரமாக ஒரு வேலையை முடிக்க முற்படும் போது அந்த வேகம் நினைவாற்றலுக்கு எதிரியாக அமைந்து விடும்.

ஒரு பணியைத் தொடங்கும் நேரத்தில் ஓய்வைக் குறைத்து முழு ஈடுபாட்டுடன் தொடங்க வேண்டும். முடிவைப் பற்றி முதலிலே கவலைப்படக் கூடாது. ஏதிர்காலத்தைப் பற்றிய எண்ணத்திலேயே நிகழ் காலத்தைக் கோட்டை விடுதல் தவறு. நிகழ்காலத்தின் மீது நம்பிக்கை கொண்டு தொடங்கும் போது எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பது அறிஞர்களின் முடிவாகும். இதற்கு உதாரணமாக மாவீரன் நெப்போலியனைக் கூறுவர். அவனுக்கு தூங்கவே நேரம் கிடையாது. போர்க்களத்தில் எங்கேயேனும் குதிரையில் அமர்ந்த படியே கண்ணை மூடிச் சில நிமிஷ நேரம் தூங்குவான். நெப்போலியனுக்கு அவ்வளவு வேலை. ஓயாது உழைப்பு நேரத்தில் அவன் கண்ணும் கருத்துமாக இருந்ததன் காரணமாக வெற்றி பெற வேண்டும் என்ற அவா.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள் வினாக்காடுக்கு விடை எழுதுக.

இலக்கியங்கள் மெத்த வளர்கின்ற மேல்நாட்டில் அந்நாட்டுத் திறனாய்வாளர் அவ்விலக்கியங்களை இரு வகைகளாகப் பிரிப்பர். இன்பம் தரும் இலக்கியம் என்றும், பயன் தரும் இலக்கியம் என்றும் இருவகைப்படுத்துவர். ஆனால், நம்முடைய நாட்டைப் பொறுத்தமட்டில், இன்பம் தரும் ஒரே குறிக்கோளாக இலக்கியம் ஆக்கப்படுவதில்லை. வாழ்க்கைக்கு பயன்படுவதே இலக்கியத்தின் முக்கிய குறிக்கோளாகும். நீதி நூல்களும் வாழ்க்கைக்கு பயன்படுகின்றன என்றாலும், நீதி நூல்களிலிருந்து இலக்கியம் மாறுபடுகின்ற இடம் ஒன்று உண்டு. நீதிநூல் திருத்துகின்ற ஆசானைப்போல் நேரிடையாக அறிவுரை வழங்கும். அதனைக் கேட்பவர் இன்பம் பெறும் நோக்கம் கொண்டவராக இருப்பின் நீதிநூல் அவரிடம் செல்லாது இலக்கியமோவெனில் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குவதெனினும், அது ஆசான் வேலையைச் செய்கின்றது என்று கண்டு கொள்ள முடியாமலேயே அதனைச் செய்து விடுகின்றது. இலக்கிய இன்பம, சர்க்கரை தடவிய மாத்திரை போல் கற்போர் உட்புகுந்து நற்பயனை விளைவிக்கின்றது.

(அ) மேனாட்டுத் திறனாய்வாளர்கள் இலக்கியத்தை எவ்விதம் வகைப்படுத்துகின்றார்கள்?

(ஆ) நம்முடைய நாட்டில் இலக்கியம் படைக்கப்படுவதன் பிரதான நோக்கம் யாது?

(இ) "நீதி நூல்கள் இலக்கிய வகையொன்றினைச் சார்ந்ததாகும்" இக் கூற்று மேற்படி பந்தியின் ஆசிரியருக்கு உடன்பாடானதா? காரணம் தருக?

(ஈ) இலக்கியங்கள் மக்களுக்கான அறிவுரைகளை எவ்வாறு வழங்குகின்றன?

(உ) இப்பந்தியில் காணப்படும் அணியினைக் குறிப்பிட்டு விளக்குக?

(ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved)

புள்ளிகள்

# பாடசாலை மட்ட இரண்டாம் தவணைக்கணிப்பீடு - 2024
# தமிழ் மொழியும் இலக்கியமும் -III

சுட்டெண்..................

தரம் : 11

நேரம் : 2.00 மணித்தியாலம்

- ❖ கவனிக்குக :
- ❖ தரப்பட்டுள்ள 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் எதாவது ஒரு வினாவிற்கும், மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.
- ❖ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01. சுருக்கமான விடையெழுதுக

1. "தேம்படு பனையின் திரள் பழத்தொருவிதை"

 (அ) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

 (ஆ) தேம்படு என்பதன் பொருள் யாது?

2. ஐவீரும் ஒருவீராய் அகல் இடத்தை நெடுங்காலம் அளித்தீர் என்றாள்.

 (அ) இதில் ஐவீர் எனக் குறிப்பிடப்படுபவர் யாவர்?

 (ஆ) இவ்வாறு கூறியவர் யார்?

3. 'அது தன்னிடமுள்ள சூட்சுமத்தை எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத் தொடங்கியது'

 (அ) இதில் சூட்சுமம் என்பதன் பொருள் யாது?

 (ஆ) 'அது' எனக் குறிப்பிடப்படுவது யாது?

4. "பொதிகை வரையினிற் கால் கொண்டு"

 (அ) பொதிகை என்பது யாது?

 (ஆ) 'கால் கொண்டு என்பதை விளக்குக?

5. 'பொங்கியெழுந்த கொழுங்கனலென எழுந்தார்'

 (அ) இதில் கொழுங்கனல் என்பதன் பொருள் யாது?

 (ஆ) ' எழுந்தார்' எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

6. "தேனலர் சண்பக வாசம் வாணுலகில் வெடிக்கும்"...

 (அ) இப்பாடலடியின் பொருள் தருக?

 (ஆ) இதில் இடம்பெறும் அணி யாது?

7. 'தென்றலிலே அசைந்தாடும் செந்நெல் வயற்கதிர்கள் தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை'

 (அ) இவ்வரியினூடக எந்நிலம் காட்டப்படுகின்றது?

 (ஆ) 'ஏருழவன் வியர்வை' என்பதனூடாக வெளிப்படும் விடயம் யாது?

8. "இப்போ பகல் பொழுதுகளில் ஈத்திலை குப்பை மேட்டில் ஏறிநின்று உமணர்கள் ஓட்டுகிற..."

 (அ) ஈத்திலை என்பது எதனைக் குறிக்கிறது?

 (ஆ) உமணர்கள் எனப்படுபவர்?

9. "மஞ்சோனா மரத்திலிருந்து இப்போதுதான் பக்குல் பறந்து போனது."

 (அ) மஞ்சோனா மரம் என்பதன் திருத்தமான வடிவம்?

 (ஆ) பக்குள் எனும் பறவையைக் குறிக்கும் வேறு பெயர் இரண்டு தருக?

10. “பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த நிதியிழந்தனத்....”

(அ) இப்பாடல் இடம்பெற்ற இலக்கியம் யாது?

(ஆ) இதில் பாலன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுள் பகுதிகளையும் உரைப்பகுதிகளையும் வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக்கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

(அ) யானையின், நாயின் செயல் பற்றிக் கூறுக?

(ஆ) இதில் காணப்படும் அளபெடைச்சொற்களைக் குறிப்பிட்டு அவற்றின் பொருள் தருக?

2) ஊனமே யான ஊனிடை யிருக்கும்
ஊயிரினைத் துறந்துமோன் பூணாம்
மானமே புரப்பத் தவனிமேலெவர்க்கும்
வரிசையும் தேற்றமும் மரபும்

(அ) இப்பாடல் யார் கூற்றாக எவ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது?

(ஆ) இதில் பூமியில் வாழ்வோரின் கடமைகளாகக் கூறப்படுபவை எவை?

3) கொங்கர்க் கமரா பதியளித்த
கோவே யிராச குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

(அ) இப்பாடலில் சோழமன்னனின் புகழ் எவ்வாறு கூறப்படுகின்றது?

(ஆ) இதில் காணப்படும் மூன்று பிறைகளையும் குறிப்பிட்டு பொருள் தருக?

4) ஒரு ஏழைப் புலவர் அவருடைய பரம்பரைச் சொத்து ஒரு பாக்குவெட்டி உயிருக்கு அடுத்தபடி அவருக்கு அதுதான் எல்லாம். விறகு வெட்ட, கறிநறுக்க, பாக்கு சீவ என்று எல்லாத்துக்கும் அதைத்தான் நம்பியிருந்தார். ஒரு நாள் அதைக் காணவில்லை. புலவருக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. தேடு தேடு என்று தேடினார். இந்தக்கதிதான் எனக்கும். பக்குவமாகப் பணியாரம் செய்து பனைநார்ப் பெட்டியில் மூடி மாடாவில் மறைத்து வைத்தது போல இவ்வளவு கவனமாக இக்கதையை கோப்பிலே செருகி வைத்தேனே!

(அ) ஏழைப் புலவரின பாக்குவெட்டி பயன்பட்ட விதங்கள் எவை?

(ஆ) கதையை பாதுகாத்த விதம் எவ் உவமைத்தொடரினூடகக் கூறப்படுகின்றது?

5) காட்சிப்படிமங்களை இணைப்பதற்குப் பல முறைகள் உண்டு ஒவ்வொன்றிற்கும் தனியான ஒரு அர்த்தமுண்டு. கண்ணிமைப்பது போல் காட்சி மாறுவது இது ஒரு இணைப்புத்தான். ஒரு காட்சி மங்கி அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுவது மயங்கித் தெளிதல். திரை இருண்டு பின் மறுகாட்சிவருவது இருண்டு தெளிதல். சினிமா மொழியின் கால்புள்ளி, முற்றுப்புள்ளி, பத்தி என இவற்றைச் சொல்லலாம். சத்தியஜித்ரேயின் பதேர் பாஞ்சாலியில் பருவங்கள் மாறுவதை வரிசையாக சில “மயங்கித் தெளிதல்கள்” மூலம் உணர்த்துகிறார்.

(அ) மயங்கித் தெளிதல், இருண்டு தெளிதல் என்றால் என்ன?

(ஆ) பருவங்கள் மாறுவது மயங்கித் தெளிதல் மூலம் என்பது எதில் உணர்த்தப்படுகின்றது?

(5 x 4 = 20 புள்ளிகள்)

03. திருக்குற்றாலக் குறவஞ்சியில்

(அ) திருக்குற்றால மலையின் உயர்ச்சி

(ஆ) குறத்திப் பெண்ணினூடாக வெளிப்படும் நாட்டின் சிறப்பு?

ஆகியன புலப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(8 + 7 = 15 புள்ளிகள்)

**அல்லது**

குகப்படலத்தில்,

(அ) பரதனின் சிறப்பு

(ஆ) கைகேயியின் சிறுமை

ஆகியன வெளிப்படுமாற்றினை விளக்குக?

(8 + 7 = 15 புள்ளிகள்)

04. குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்... என்ற கவிதையில்

(அ) இயற்கை வர்ணனை

(ஆ) மனித வாழ்வுக்கான படிப்பினைகள்

ஆகியவற்றை விளக்குக?

(8 + 7 = 15 புள்ளிகள்)

**அல்லது**

பாரதியார் சுயசரிதையில்,

(அ) பாரதியார் காதலியை எதிர்பார்த்திருந்த விதமும் அவளது பார்வை கிட்டியதால் ஏற்பட்ட மகிழ்வும்.

(ஆ) முயற்சியில் முழுமனதோடு ஈடுபடாது தோல்வியைத் தழுவுவோரின் நடத்தைகள்

சித்தரிக்கப்படுமாற்றினை விளக்குக?

(8 + 7 = 15 புள்ளிகள்)

05. குறுந்தொகைப் பாடலில்,

(அ) தலைவன் மீதான தலைவியின் காதல் உணர்வு..

(ஆ) இதில் கையாளப்பட்டுள்ள அணி

ஆகிய வற்றை விளக்குக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

06. கம்பியூட்டர் சிறுகதையில்,

(அ) கம்பியூட்டரின் வரவால் வீட்டில் ஏற்பட்ட மாற்றங்கள்

(ஆ) கதையில் கையாளப்பட்ட நகைச்சுவைகள் என்பவற்றை ஆசிரியர் வெளிப்படுத்தும் விதத்தினை விளக்குக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

07. இலட்சியமும் சம நோக்கும் என்ற கட்டுரையில்

(அ) இலட்சியம்

(ஆ) இலட்சியவாதிகள்

பற்றி விபரிக்குக.

(5 x 2 = 10 புள்ளிகள்)